## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 4-8 - ஏறாளும்
## (ஆழ்வாற் 'எம்பெருமான் வேண்டாத என் உயிரும் உடைமைகளும் எனக்கும் வேண்டா' என்று தலைவி பாசுரத்தால் பேசுதல்)

3084 * ஏறாளும் இறையோனும் *
திசைமுகனும் திருமகளும் *
கூறாளும் தனி உடம்பன் *
குலங்குலமா அசுரர்களை **
நீறாகும்படியாக *
நிருமித்துப் படை தொட்ட *
மாறாளன் கவராத *
மணிமாமை குறைவிலமே 1

3085 மணிமாமை குறைவில்லா *
மலர்மாதர் உறை மார்பன் *
அணிமானத் தடவரைத்தோள் *
அடலாழித் தடக்கையன் **
பணிமானம் பிழையாமே *
அடியேனைப் பணிகொண்ட *
மணிமாயன் கவராத *
மடநெஞ்சால் குறைவிலமே 2

3086 மடநெஞ்சால் குறைவில்லா *
மகள் தாய் செய்தொரு பேய்ச்சி *
விடநஞ்ச முலை சுவைத்த *
மிகுஞானச் சிறு குழவி **
படநாகத்தணைக் கிடந்த *
பருவரைத்தோள் பரம்புருடன் *
நெடுமாயன் கவராத *
நிறையினால் குறைவிலமே 3

3087 நிறையினால் குறைவில்லா *
நெடும்பணைத்தோள் மடப்பின்னை *
பொறையினால் முலையணைவான் *
பொருவிடையேழ் அடர்த்துகந்த **
கறையினார் துவருடுக்கை *
கடையாவின் கழிகோல்கை *
சறையினார் கவராத *
தளிர்நிறத்தால் குறைவிலமே 4

3088 தளிர்நிறத்தால் குறைவில்லாத் *

தனிச்சிறையில் விளப்புற்ற *
கிளிமொழியாள் காரணமாக் *
கிளர் அரக்கன் நகர் எரித்த **
களிமலர்த் துழாய் அலங்கல் *
கமழ்முடியன் கடல் ஞாலத்து *
அளிமிக்கான் கவராத *
அறிவினால் குறைவிலமே 5

3089 அறிவினால் குறைவில்லா *
அகல்ஞாலத்தவர் அறிய *
நெறியெல்லம் எடுத்துரைத்த *
நிறைஞானத்து ஒரு மூர்த்தி **
குறிய மாணுருவாகிக் *
கொடுங்கோளால் நிலம் கொண்ட *
கிறியம்மான் கவராத *
கிளரொளியால் குறைவிலமே 6

3090 கிளரொளியால் குறைவில்லா *
அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து *
கிளரொளிய இரணியனது *
அகல்மார்பம் கிழித்துகந்த **
வளரொளிய கனலாழி *
வலம்புரியன் மணிநீல *
வளரொளியான் கவராத *
வரிவளையால் குறைவிலமே 7

3091 வரிவளையால் குறைவில்லாப் *
பெருமுழக்கால் அடங்காரை *
எரியழலம் புகவூதி *
இருநிலமுன் துயர் தவிர்த்த **
தெரிவரிய சிவன் பிரமன் *
அமரர் கோன் பணிந்தேத்தும் *
விரிபுகழான் கவராத *
மேகலையால் குறைவிலமே 8

3092 மேகலையால் குறைவில்லா *
மெலிவுற்ற அகலல்குல் *
போகமகள் புகழ்த் தந்தை *
விறல் வாணன் புயம் துணித்து **
நாகமிசைத் துயில்வான் போல் *
உலகெல்லாம் நன்கொடுங்க *
யோகணைவான் கவராத *
உடம்பினால் குறைவிலமே 9

3093 உடம்பினால் குறைவில்லா *
உயிர் பிரிந்த மலைத் துண்டம் *
கிடந்தன போல் துணிபலவா *
அசுரர் குழாம் துணித்துகந்த **
தடம்புனல சடைமுடியன் *
தனியொரு கூறு அமர்ந்துறையும் *
உடம்புடையான் கவராத *
உயிரினால் குறைவிலமே 10

3094 * உயிரினால் குறைவில்லா *
உலகேழ் தன்னுள் ஒடுக்கி *
தயிர் வெண்ணெய் உண்டானைத் *
தடங்குருகூர்ச் சடகோபன் **
செயிரில் சொல்லிசை மாலை *
ஆயிரத்துள் இப்பத்தால் *
வயிரம் சேர் பிறப்பறுத்து *
வைகுந்தம் நண்ணுவரே 11

**அடிவரவு:** ஏறாளும் மணி மட நிறை தளிர் அறிவு கிளர்
வரிவளை மேகலை உடம்பு உயிர் நண்ணாதார்